காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2016 ஒக்தோபர் 01 இலிருந்து 2017 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4.09(பீ) பிரிவு மற்றும் 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 5768-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, மற்றும் ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகவுள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 செப்தெம்பர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 மே 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்

நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 42.0 | 6,048 | 500 | 3.87 | 591.89 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 02 | 0.01 | 1.30 |
| **மொத்தம்** | **42.0** | **6,048** | **502** | **3.88** | **593.19** |

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

மேலதிக நிதியளித்தல் நோக்கத்திற்கான செயற்திட்ட நடவடிக்கைகள் அதிக காலநிலை மீட்சி பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதில் பிரதானமாக கவனம் செலுத்துவதுடன் முதலீட்டுத் காலநிலை உட்கட்டமைப்பு காலநிலை மாற்றத்தினை அதிகரித்தல், ஆதரவை அமுல்படுத்தல் போன்ற பிரதான 02 கூறுகளை உள்ளடக்கியுள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய சாத்தியவள ஆய்வுக் கற்கை அறிக்கைகள் கணக்காய்வு நோக்கங்களிற்காக இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டில் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறை மதிப்பிடப்பட முடிந்திருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகாரசபையில் வழங்கப்பட வேண்டியிருந்த 17 ஒப்பந்த பொதிகளில், 04 ஒப்பந்த பொதிகளின் கீழான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தங்களின் கீழான வேலைகளின் செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 64 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையிலான வீச்சிலிருந்ததாக அறிக்கையிடப்பட்டது.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

சிரேஷ்ட சமூக பாதுகாப்பு அலுவலகம் மற்றும் மீள்குடியேற்ற நிபுணர், தொடர்பாடல் நிபுணர், சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் நிபுணர், மனித வள அலுவலகர் மற்றும் உதவி உத்தியோகத்தர்களின் ஏனைய பல பதவியணிகளுக்கான முக்கிய பதவிகளிற்கான அலுவலகர்களின் பற்றாக்குறையுடன் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது செயற்பாட்டிலிருந்தது.

## 3.4 உள்ளகக் கணக்காய்வு

நிதி அமைச்சின் செயலாளரின் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஐ.அ.டொலர் 10 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்திலான வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டத்திற்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அனுமதியுடன் உள்ளகக் கணக்காய்வாளரை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளரை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் கணக்காளர், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் 03 சிரேஷ்ட கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வுக் குழுவால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தன. உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களானது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான முக்கிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென சுட்டிக்காட்டியது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களில் அதிகமானோர் செயற்திட்ட நடவடிக்கைகளின் முகாமைத்துவ தீர்மானமெடுத்தல் செயன்முறையில் ஈடுபட்டிருந்ததுடன் அதனால் செயற்திட்டச் செயற்பாடுகளின் தன்னிச்சையான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட முடியாதிருக்கும்.